உலக சோசலிச வலைத் தளம் www.wsws.org

# பிரெஞ்சு சோசலிஸ்ட் கட்சி அரசாங்கம் புதிய சுற்று சுதந்திர-சந்தை சீர்திருத்தங்களை அறிவிக்கிறது

By Kumaran Ira, 4 March 2015

ஒரு நாடாளுமன்ற வாக்கெடுப்பு இல்லாமலேயே வணிக-சார்பு நெறிமுறைகளை தளர்த்தும் சட்டமசோதாவை கடந்த மாதம் முன்கொண்டு வந்த பின்னர், சோசலிஸ்ட் கட்சி (PS) தொழிலாளர் சட்ட பாதுகாப்புகள், மருத்துவ பராமரிப்புகள், மற்றும் வேலைவாய்ப்பின்மை நல உதவிகள் மீதான தாக்குதல்கள் உட்பட, ஒரு புதிய சுற்று மக்கள்விரோத சிக்கன நடவடிக்கைகள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களுக்கு தயாரிப்பு செய்து வருகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதம் என்ற ஐரோப்பிய ஒன்றிய பற்றாக்குறை வரம்பை பூர்த்தி செய்ய புதிதாக இரண்டு ஆண்டுகால அவகாசம் வழங்கிய பின்னர், கட்டமைப்பு சீர்திருத்தங்களை மற்றும் சிக்கன முறைமைகளை தீவிரப்படுத்துமாறு ஐரோப்பிய கமிஷன் பாரீஸிற்கு கூறியது. பிரெஞ்சு கட்டமைப்பு பற்றாகுறையை (structural deficit) 2015 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதம் அளவிற்கும், 2016 இல் 0.8 சதவீதம் மற்றும் 2017 இல் 0.9 சதவீதம் அளவிற்கும் குறைக்க வெள்ளியன்று ஐரோப்பிய ஒன்றியம் பாரீஸிற்கு அழைப்புவிடுத்தது.

*EU Observer* இன் கருத்துப்படி, “இலக்குகளை எட்டுவதற்கு எதிர்நோக்கப்படும் ஒருங்கிணைந்த மூலோபாய விபரங்களை அறிவிக்கவும் மற்றும் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கவும்" ஜுன் 10 வரையில் ஐரோப்பிய ஒன்றியம் PS க்கு கால நிர்ணயம் வழங்கியுள்ளது. ஆகவே பாரீஸ் கூடுதலாக 4 பில்லியன் யூரோ மதிப்பிலான செலவின வெட்டு நடவடிக்கைகளை செய்ய பார்க்கும். புருசெல்ஸ் "ஒரு கட்டமைப்பு பதிலுக்காக காத்திருக்கிறதே ஒழிய, ஒரேயடியான நடவடிக்கைகளை அல்ல" என்று கமிஷனின் ஓர் அதிகாரி வலியுறுத்தினார்.

பற்றாக்குறை இலக்குகளை நிறைவேற்ற ஐரோப்பிய ஒன்றியம் பிரான்ஸிற்கு கூடுதலாக இரண்டு ஆண்டுகால அவகாசம் அளித்த பின்னர், சில ஜேர்மன் அரசியல்வாதிகள் ஐரோப்பியம் ஒன்றியம், பிரான்ஸ் மீது மிகவும் கரிசனமாக இருந்து வருவதாக விமர்சித்தனர். CSU இன் ஜேர்டா ஹாஸ்செல்ஃபெல்ட் (பாவரியாவின் கிறிஸ்துவ சமூக ஒன்றியம்) ஐரோப்பிய கமிஷன் தலைவர் ஜோன்-குளோட் ஜங்கருக்கு எழுதுகையில், விதிமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு அவரை வலியுறுத்தினார். “விதிவிலக்குகளை பொறுத்துக் கொண்டு இல்லாமல் இருப்பது, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யூரோ மண்டலத்திற்கான நமது கடமைப்பாடாகும்,” என்று அவர் கூறியதாக *Die Welt am Sonntag* எடுத்துரைத்தது.

திங்களன்று, பிரெஞ்சு பொருளாதார மந்திரி இமானுவேல் மாக்ரோன், கட்டமைப்பு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் பாரீஸின் நோக்கங்களின் மீது ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளை சமாதானப்படுத்த அவர்களை புருசெல்ஸில் சந்தித்தார். அந்த சந்திப்பிற்குப் பின்னர், மாக்ரோன் கூறுகையில், “நாங்கள் 2015 இல் இருந்து 2017 வரையில் 50 பில்லியன் [யூரோ] வெட்டுக்களைச் செய்ய திட்டமிட்டுள்ளோம், அவற்றை நாங்கள் செய்வோம். 2017 க்குள் [GDP இல்] 3 சதவீத அளவிற்கு வரவு-செலவு கணக்கு பற்றாக்குறையை வெட்டுவதிலும் எங்களது ஈடுபாட்டை தொடர்ந்து வைத்திருப்போம்,” என்றார்.

*Le Journal du Dimanche* இன் கருத்துப்படி, அரசாங்கம் கடுமையான வெட்டுக்களை திட்டமிட்டு வருகிறது, அவை பிரான்சின் சமூக இழையோட்டத்தையே மாற்றிவிடும்: “[பிரதம மந்திரி] இமானுவெல் வால்ஸின் பரிவாரத்தால் பயன்படுத்தப்பட்ட வாசகமான, ஒரு 'புதிய சமூக ஒழுங்கமைப்பை' முன்னெடுப்பதே மத்தினியோன் [Matignon-பிரதம மந்திரி அலுவலகத்தின்] எண்ணமாகும். முன்னால் இருக்கும் பிரச்சினைகள் அனைத்தும் வெடிப்பார்ந்து உள்ளன: போராடிக் கொண்டிருக்கும் நிறுவனங்களில் வார வேலையை நீடிப்பது, வேலைவாய்ப்பின்மை உத்திரவாதம், ஓய்வூதிய திட்டங்கள் … அவை அனைத்துமே முதல் 'வேலை சட்டத்தில்' இருக்காது, ஆனால் தலைவர் பார்ப்பதைப் போல, அவை 'விரைவாக' சேர்த்து நகர்த்தப்பட வேண்டும்,” என்றார்.

கடந்த புதனன்று, வால்ஸ் கோடைகால வாக்கில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட உள்ள, வேலையிட பிரதிநிதித்துவத்தை அல்லது "சமூக பேச்சுவார்த்தை முறையை" மாற்றுவதற்கான புதிய சீர்திருத்தங்களை முன்வைக்க வணிக குழுக்களையும் மற்றும் தொழிற்சங்க அதிகாரிகளையும் சந்தித்தார். ஜனவரியில் வணிக குழுக்களும் மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவமும் ஓர் உடன்படிக்கையை எட்ட தவறியதால், அரசாங்கம் தொழிலாளர் சட்டமசோதாவைக் கையிலெடுக்கிறது. ஒரு "அவசியமான" சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான "அதன் பொறுப்புறுதிகளை" அவரது அரசாங்கம் "முகங்கொடுத்து வருவதாக" வால்ஸ் வாதிட்டார்.

பிரான்ஸிலும் ஐரோப்பாவெங்கிலும் சிக்கன நடவடிக்கைகளுக்கான தொழிலாள வர்க்கத்தின் ஆழ்ந்த எதிர்ப்பு பிரதானமாக திட்டமிட்டு நசுக்கப்பட்டுள்ளதால், 2012 இல் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்தே PS ஆல் அதுபோன்ற நடவடிக்கைகளை திணிக்க முடிந்துள்ளது.

2012 இல் PS இன் ஜனாதிபதி பிரான்சுவா ஹோலாண்டை தேர்ந்தெடுக்க அழைப்புவிடுத்த புதிய முதலாளித்துவ எதிர்ப்பு கட்சி (NPA) போன்ற போலி-இடது கட்சிகளும் மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவமும் PS அரசாங்கத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அரசியல்ரீதியில் ஒன்றுதிரட்டுவதை எதிர்க்கின்றனர். இந்த அடித்தளத்தில், வால்ஸ் மற்றும் ஹோலாண்ட் மேற்கொண்டும் வெட்டுக்களுக்கு அழுத்தம் அளித்து வருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தால் பிரான்சிடம் வலியுறுத்தப்பட்ட மற்றொரு சீர்திருத்தமான வேலைவாய்ப்பின்மை உதவி திட்டத்தின் மீது வேகமாக பேச்சுவார்த்தைகளை தொடங்குமாறு, தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் வழங்குனர்களின் அமைப்புகளுக்கு வால்ஸ் அழைப்புவிடுத்தார்.

அரசாங்கம் வரவு-செலவு திட்டக்கணக்கு வெட்டுக்களில் மேற்கொண்டும் 3 பில்லியனை திட்டமிட்டு வருகிறது. அந்த திட்டம் உத்தியோகபூர்வமாக இதுவரையில் அறிவிக்கப்படவில்லை என்றபோதினும், வணிக இதழ் *Challenges குறிப்பிடுகையில்,* “'மொத்த ஊதிய சட்டமசோதாவைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக' 860 மில்லியன் யூரோ அளவிற்கு ஒரு மிகப்பெரிய வெட்டுக்கள் வரவிருக்கின்றன. அதாவது 22,000 வேலைகளை வெட்டுவது, அல்லது அரசு மருத்துவமனை பணியாளர்களில் 2 சதவீதத்தினரை வெட்டுவது என்பது இதன் அர்த்தம்,'' என்று எழுதியது.

மருந்து பொருட்களுக்கு அரசு அளித்துவரும் விலையை வெட்டவும், மிகவும் செலவுபிடிக்கும் மருத்துவ நடைமுறைகளைக் கொண்டு வரவும் மற்றும் நோயாளிகள் பெரிதும் வெளிநோயாளிகள் பிரிவில் அறுவைசிகிச்சையை சார்ந்திருக்குமாறு செய்வதன் மூலமாக மருத்துவமனையில் அனுமதியாகும் எண்ணிக்கையை குறைக்கவும் அரசாங்கம் திட்டமிடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்போது வேலையிட பேரம்பேசும் வழிமுறைகளிலிருந்து என்னவெல்லாம் சொற்ப பாதுகாப்புகள் கிடைக்கிறதோ அவற்றையும் நீக்குவதற்காக, வேலையிடத்தில் "சமூக பேச்சுவார்த்தை முறை" மீதான விதிமுறைகளை தளர்த்துவதற்கு வணிக குழுக்கள் அழைப்புவிடுத்துள்ளன.

தற்போது, “சமூக நிர்ணயங்கள்" (*seuils sociaux*) என்றழைக்கப்படுவது தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிறுவனங்களின் கடப்பாடுகளை நிர்ணயிக்கின்றன. 11 தொழிலாளர்களுக்கு குறைவாக உள்ள வணிகங்களுக்கு எந்த கடப்பாடுகளும் கிடையாது. 11 க்கு கூடுதலான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள், தொழிலாளர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களை ஒழுங்கமைக்க வேண்டும். 50 தொழிலாளர்கள் அல்லது அதற்கு கூடுதலானவர்கள் இருந்தால், வணிகங்கள் தொழிலாளர்கள் கவுன்சில் அமைக்க வேண்டும்; ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் வேலையிட நிலைமைகளுக்கான (HSC) கமிட்டி உருவாக்க வேண்டும்; மற்றும் பாரிய வேலைநீக்கங்கள் விடயத்தில் ஒரு வேலை பாதுகாப்பு திட்டத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்றிருக்கிறது.

தற்போதைய நிர்ணயங்கள் மற்றும் கடப்பாடுகளை "செலவுமிகுந்ததாகவும், முடக்குவதாகவும்" குறிப்பிட்டு, மெடெஃப் வணிக கூட்டமைப்பு அவற்றை விமர்சித்தது.

CGPME என்னும் சிறு வணிக கூட்டமைப்பு குறிப்பிடுகையில், “49 இல் இருந்து 50 தொழிலாளர்களுக்கு செல்லும் ஒரு நிறுவனம் 35 புதிய கடப்பாடுகளை முகங்கொடுக்கிறது. அதன் தொழிலாளர் செலவுகள் 4 சதவீதத்திற்கு உயர்கின்றன,'' என்றது.

வணிக முறையீடுகளுக்கு விடையிறுப்பாக, அந்த சீர்திருத்தமானது, "தற்போது 200 தொழிலாளர்கள் வரையில் இருக்கும் நிறுவனங்களில் தொழிலாளர் பிரதிநிதித்துவ அமைப்பை அமைக்க வேண்டும் என்றிருப்பதற்கு பதிலாக, 300 தொழிலாளர்கள் வரையில் இருக்கும் [நிறுவனங்களில்] ஒரேயொரு தொழிலாளர் பிரதிநித்துவ அமைப்பை அமைக்கும்." மேலும் "அவர்களின் தொழிலாளர் பிரதிநிதித்துவ அமைப்புகளின் வடிவத்தை கூட்டு உடன்படிக்கை மூலமாக நிர்ணயிக்கும் வாய்ப்பை நிறுவனங்களுக்கு வழங்குகிறது.'' 11 க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களை பொறுத்த வரையில், அரசாங்கம் முறையே 10 தொழிலாளர்கள் மற்றும் தொழில் வழங்குனர்களின் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்ட பிராந்திய கமிட்டிகளை அமைக்க பரிந்துரைக்கிறது.

PS அரசாங்கம் எரிச்சலூட்டும் விதத்தில் அதை "பிரதான சமூக முன்னேற்றமாக" சித்தரித்து வருகிறது. உண்மையில், அது வணிகங்களுக்கு ஆதரவாக தொழிலாளர் சக்தியை மறுஒழுங்கமைப்பதை, கூடுதலாக தொழிலாளர் உரிமைகளை நீக்குவதை, மற்றும் ஒட்டுமொத்த தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக பரந்த தாக்குதல்களை முன்னுதாரணமாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

எரிச்சலூட்டும் விதமாக தொழிற்சங்கங்கள், முதலாளிமார்களுடனான அவர்களின் பேச்சுவார்த்தைகளின் போதைய நடவடிக்கைகளை எதிர்த்தன, ஆனால் அரசாங்கம் அந்த சட்டமசோதாவை நிறைவேற்றிவிடும் என்று அவை நம்புவதாக குறிப்பிட்டுள்ளன. ஏற்கனவே வழங்கப்பட்ட விட்டுக்கொடுப்புகளை விட கடுமையான விட்டுக்கொடுப்புகளை அமுல்படுத்தி, தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்த தொழிலாளர் சக்தியின் மீதும் பொலிஸ் வேலை செய்ய, புதிய சட்டத்தின் கீழ், தொழில் வழங்குனர்களுடன் அதிக நெருக்கமாக ஒத்துழைக்கும்.

PS உடன் தொடர்புபட்ட பிரெஞ்சு ஜனநாயக தொழிலாளர் கூட்டமைப்பு (CFDT) தொழிற்சங்கம், வால்ஸ் உடனான சந்திப்பிற்குப் பின்னர் அந்த சட்டமசோதாவை, சிறு வணிகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு "அதுவொரு வெற்றி" என்று கூறியும், ஏனையவர்களின் "எந்த தனியுரிமைகளும்" நீக்கப்படவில்லை என்று வாதிட்டும் அதை வரவேற்றது.

முந்தைய தொழிலாளர் சீர்திருத்தங்களுக்கு ஒப்புதல் வழங்கிய ஸ்ராலினிச தொழிற்சங்கமான தொழிலாளர் பொதுக் கூட்டமைப்பு (CGT) மற்றும் FO (தொழிலாளர் சக்தி) உட்பட ஏனைய தொழிற்சங்கங்களும், எரிச்சலூட்டும் விதமாக இன்னுமொரு ஏப்ரல் 9 நடவடிக்கை நாளுக்கு, ஒரு மாதத்திற்கும் அதிகமான காலம் இருக்கின்ற நிலையில், அழைப்புவிடுத்தன.